**செய்தி வெளியீடு எண்: 127** **நாள்: 19.02.2019**

**தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான கைபேசி செயலி உருவாக்கும் திட்டம்**

இன்றைய சூழ்நிலையில் கைபேசியை இளைஞர்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். திறன் பயிற்சி குறித்த விவரங்கள் கைபேசி செயலி வாயிலாக அளிக்கப்பட்டால் இளைஞர்களை விரைவாக சென்றடையும். எனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், திறன் பயிற்சிகள் மற்றும் வேலை வழங்கும் நிறுவனங்கள் குறித்த விவரங்களை திறன் பயிற்சி நாடுநர்கள் எளிதில் தெரிந்து கொள்ளவும், திறன் பயிற்சிக்காக பதிவு செய்து கொள்வதற்காகவும் 2017–18 ஆம் நிதியாண்டின் பட்ஜெட் கூட்டத் தொடரில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான கைபேசி செயலி உருவாக்கும் திட்டத்தினை ரூ.3.00 இலட்சம் செலவில் செயல் படுத்திட அரசாணை வெளியிடப்பட்டு கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**இச்செயலியின் சிறப்பு அம்சங்கள்**

- இச்செயலியானது ஆன்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் இயங்குதளத்தில் செயல்படும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மாவட்டம் தோறும் இயங்கி வரும் திறன் பயிற்சி நிறுவனங்கள், வழங்கப்படும் பயிற்சிகள், பயிற்சிக்கான கால அளவு மற்றும் பயிற்சி பெறுவதற்கான தகுதிகள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் கொண்டுள்ளது.
- திறன் பயிற்சி பெற விரும்பும் நபர்கள் இச்செயலியை பயன்படுத்தி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் பதிவு செய்துக் கொள்ளலாம்.
- இச்செயலியானது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்வதற்கான ஒரு தளமாக செயல்படும்.
- இச்செயலியானது NSDC, PMKVY போன்ற பிற முக்கிய திறன் பயிற்சி தொடர்புடைய இணைய தளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இச்செயலியை Google Play store யை பயன்படுத்தி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இக்கைபேசி செயலி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 20.02.2019 அன்று காலை 11.00 மணியளவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மை செயலாளர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் செயல் இயக்குநர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**